சுருக்கம்

மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் - நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு வசதி – ஆவடி நகராட்சிக்கு ரூ.103.84 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் - நிர்வாக அனுமதி - ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை

அரசாணை (இருபதாண்டு) எண்.20 நாள்:22.1.2008

படிக்க:-

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.Roc.No.15146/2007/P3, நாள் 4.12.2007.

--------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஆவடி நகராட்சிக்கு ரூ.103.84 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி ஆணையர், ஆவடி அவர்கள் கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அவர் ஆவடி நகராட்சி ஆணையர் தமது கடிதத்தில் ஆவடி நகராட்சியில் பல வருடங்களாக பொது மக்களுக்கு சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து குடிநீர் விலைக்கு வாங்கப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான வாரி மற்றும் தெரு பொதுக்குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளதாகவும் எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி வீட்டுக்கு வீடு குடிநீர் இணைப்பு வழங்க ரூ.103.84 கோடியில் விரிவான திட்ட அறிக்கை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலமாக தயாரிக்கப்பட்டது என்றும் இத்திட்டத்தினை மத்திய அரசின் ஊரக வளர்ச்சி துறை அமைச்சரக கடிதம் எண்.K-14012/2/2006/NURM, நாள் 15.11.2007 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கம் (JNNURM) அனுமதி அளித்துள்ளது என்றும் இதன் அடிப்படையில் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 22.11.2007 நாளிட்ட தனது கடித எண்.TUFIDCO/JNNURM/ AM(M)/2007-ல் கீழ்க்கண்டவாறு இத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:-

| வ.எண். | விவரம் | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | மான்யம் (40%) | 4153.60 |
| 2. | வட்டியில்லா கடன் (10%) | 1038.40 |
| 3. | சொந்த நிதி / நிதி நிறுவன பங்கு | 5192.00 |
| | மொத்தம் | 10384.00 |

மேலும் இத்திட்டத்தினை சென்னை பெருநகர குடிநீர் வாரியத்தின் மூலம் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் மேற்குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆவடி நகரமன்றம் தனது தீர்மானம் எண்.854, நாள் 28.9.2007ல் ஒப்புதல் அளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. எனவே, ஆவடி நகராட்சிக்கு ரூ.103.84 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தை நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு வசதி - ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்குமாறு மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. எனவே மேலே பத்தி 2ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு கவனமான பரிசீலித்து ஆவடி நகராட்சிக்கு ரூ.103.84 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தை நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு வசதி - ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.4160/FS/P/07, நாள் 29.12.2007-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் (ம) கழிவு நீரகற்று வாரியம், சென்னை-2.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை-35.
ஆணையர், ஆவடி நகராட்சி, ஆவடி, சென்னை.
மாநில தலைமை கணக்காய்வாளர், சென்னை-18.
மாநில தலைமை கணக்காய்வாளர், சென்னை-18.(பெ.உ)
உள்ளுறை தணிக்கை அலுவலர், செனனை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மெட்ரோ / வ.செ) துறை, சென்னை-9.
நிதி (ந.நி. (ம) கு.வ.) துறை, சென்னை-9.

-/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

23-1-08

பிரிவு அலுவலர்